**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 221/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா. 5** |
| Name : | **திரு. பிச்சை** |
| Father's Name/Husband Name: | **திரு. சொக்கலிங்கம்** |
| Village : | தெரணி |
| Taluk : | **ஆலத்தூர்** |
| Age : | 42/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 25.09.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரிகள் 4 முதல் 10 ஆஜர். எதிரிகள் 1, 2 ஆஜர் இல்லை )**
**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கருப்புசாமியை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு நான் கடைக்கு போவதற்காக கோவில் அருகே சென்ற போது போலிசார் படம் வரைந்து கொண்டிருந்தனர். சம்பவயிடத்தின் அமைப்பை எழுதிக் கொண்டனர். அவ்வாறு எழுதிய மகஜரில் நான் கையொப்பம் போட்டேன். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலிசார் என் முன்னிலையில் பொருட்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை. **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ் பகுதி சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தனர் என்றும், கடந்த 05.11.2021 அன்று காலை 8.40 மணியளவில் கருப்பசாமி கோவிலுக்கு அருகே போலிசார் என் முன்னிலையில் 3 கருவேல கட்டைகளையும், நான்கு உடைந்த ஓட்டுத்துண்டுகளையும் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றினார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் சாட்சி கையொப்பமிட்டேன் என்றும், தற்போது உடல்நிலை சரியில்லை என்பதால் அதனை மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கையொப்பமிட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த தேதி மாதம் நான் கையொப்பமிட்டேன் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.